# நதிகள் இணையும் புதிய இந்தியா

## "நீரின்றி அமையாது உலகு"

நாட்டின் தண்ணீர் பிரச்சினை மக்களால் சதா சர்வ காலமும், அரசால் அவ்வப்போதும், அரசியல்வாதிகளால் தேர்தலின்போதும் சிந்திக்கப்படுகிறது. வறட்சியும் வெள்ளமும் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் வருகை தந்து பல்லாயிரக்காண கோடி ரூபாய்கள் மதிப்பில் சொத்துச் சேதமும், நூற்றுக்கணக்கில் உயிர்ச்சேதமும் விளைவிக்கும்போது அரசு நிவாரணத் திட்டங்களை அறிவிக்கிறது. கணக்கில் எழுதப்படும் நிவாரணத்தில் ஒரு சிறிய பங்கு பயனாளிகளை அடைவதற்குள் அடுத்த ஆண்டு அவலத்துக்குத் தயாராகிவிடுகிறோம். சராசரியாக, ஒவ்வொரு ஆண்டும் வறட்சி, வெள்ள நிவாரணத்துக்காக அரசு ரூபாய் 45000 கோடி செலவிடுகிறது. இது நமது வரிப்பணம். இந்த நிவாரணச் செலவு, மொத்த சேதத்தில் ஒரு பகுதிதான் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆண்டுதோறும் அரங்கேறும் இந்த அவலநிலையை முன்வைத்து, நமது உச்சநீதி மன்றம் இரண்டாண்டுகளுக்கு முன்பு மத்திய அரசுக்கும் எல்லா மாநில அரசுகளுக்கும் ஒரு நோட்டீஸை அனுப்பியது. அதில் கேட்கப்பட்ட கேள்வி: இந்த ஆண்டுதோறும் விளையும் சேதத்தைத் தவிர்க்க அரசு ஏன் நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது, என்பதுதான். அதே சமயத்தில், அறிவியல்பூர்வமாக, அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டைப்பற்றிச் சிந்திக்கும் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமும் நதிகளை இணைப்பதன் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தி, தமது சுதந்திர தின உரையில் அறிவுறுத்தினார்.

தேசீய ஜனநாயகக் கூட்டணி அரசு உச்சநீதிமன்றத்திற்குத் தந்த பதிலில், நதிகள் இணைப்புத்திட்டம் 2016க்குள் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தது. இதைத் தொடர்ந்து, திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் மத்திய மந் திரியுமான திரு சுரேஷ் பிரபுவின் தலைமியில் ஒரு செயல்பாட்டுக் குழுவை (Task Force) நியமித்தது. இந்த செயல்பாட்டுக்குழு தனது முதல் கட்ட வேலையாக மாநில அரசுகளைக் கலந்து திட்டத்துக்கு அவற்றின் ஒப்புதலைப் பெறும் முயற்சியை மேற்கொண்டது. மூன்றாண்டுகளில் இந்த செயல்பாட்டுக்குழு என்ன சாத்தித்தது என்பது பொதுமக்களிடம் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அதற்குள் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. ஆட்சி மாறியது. புதிய மத்திய அரசு, இந்தத் திட்டம் இப்போதுதான் முதன் முறையாகப் பேசப்படுவதைப் போல் நடந்து கொள்கிறது. இத்தனைக்கும், இந்த அரசில் பங்கு பெறும் தமிழக கட்சிகள் ஒவ்வொன்றும் நதிகளை இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதாக வாக்காளர்களிடம் கூறியதை இன்னும் ஒருவரும் மறக்கவில்லை. மக்கள் ஜனநாயக அரசியலுக்கு அளிக்க வேண்டியுள்ள மிகப் பெரும் விலைகளில் தலையாயது, அரசு மாற்றத்தின் விளைவாக முந்தைய அரசின் திட்டங்கள், மக்களின் வரிப்பணத்தை செலவு

செய்து செயல்படுத்தப்படுபவை, புது அரசினால் கைவிடப்படுவதும், அலட்சியப்படுத்துவதும் அதன் விளைவாக நாட்டிற்கு ஏற்படும் பெரும் இழப்புகளும்தான்.

நாட்டின் நீர்வளத்தைப் பற்றிய பின்வரும் அடிப்படை விவரங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்:

அ. உலகின் நீர் இருபபில் 70% சதவிகிதம் கடல்களில் உப்பு நீர். 29% சதவிகிதம் உறைந்த பனிப்பாறைகள்(இமயத்தின் உச்சியில் உள்ளதைப் போல்) மற்றும் தென்,வட துருவ உறைபனி. மீதி 1% தான் உயிரினங்களுக்கும் உணவுத் தொழிலுக்கும் ஆதாரம். இந்த ஒரு சதவிகித நீர்வளமும் தான்தோன்றித்தனமாக சிதறிக்கிடக்கிறது. ஜனத் தொகை நெருக்கமான பகுதிகளில் குறைவாகவும், தண்ணீர் அதிகம் தேவைப் படாத இடங்களில் மிகுதியாகவும் (உதாரணம்: அமேஸான் நதிதீரம்) அமைந்துள்ளது. நீர்வளத்துறை நிபுணர் மாலின் ஃபால் கென்மார்க், நாம் "தண்ணீர்ச் சுழற்சியின் கொடுங்கோலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்கிறார். உலக முழுமையிலும் மனித சமுதாயம் உபயோகிக்கக் கூடிய வகையில் சுமார் 120 கோடி கன மீட்டர்கள் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. இது நபருக்கு ஆண்டுக்கு 8000 கன மீட்டர் கணக்காகிறது. 2025ல், மேலும் 20 கோடி ஜனங்கள் பெருகிவிட்ட நிலையில், இது ஆண்டுக்கு நபருக்கு 5000 கன மீட்டராகக் குறைந்து விடும்.

ஆ. பரவலாக, விவர ஆதாரமின்றி பேசுபவர்கள், இந்தியா நீர்வளம் செழித்த நாடு என்று கூறுவதுண்டு. ஆனால், ஐ.நா.சபையின் 1998ம் ஆண்டு புள்ளிவிவரப்படி, இந்தியா ஒரு "நீர்வள இறுக்க" (water stressed country) நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. வருடத்துக்கு நபருக்கு 1700 கன மீட்டருக்குக் குறைவாக (உலக சராசரி 8000 கன மீட்டர்) நீர்வளம் பெற்ற நாடுகள் இந்தத் "தகுதி" பெறுகின்றன.

இ. உலக வங்கியின் ஆய்வுப்படி, இந்தியாவைக்காட்டிலும் நீர்வளம் குறைந்த நாடுகள் (உதாரணம்: தென் கொரியா, தென் ஆப்பிரிக்கா) இந்தியாவைக் காட்டிலும் வேளாண்மை உற்பத்தியிலும், குடிதண்ணீர், சுகாதார வசதிகளுக்கான தண்ணீர், தொழில்களுக்குத் தண்ணீர் வசதி விஷயங்களிலும் முன்னேறியுள்ளன. காரணம், இந்தியாவின் மொத்த நதிநீர் வளத்தில் (ஆண்டொன்றுக்கு 1869 கன கிலோமீட்டர்) 30 சத விகிதம் தான் (550 கன கிலோமீட்டர்) பயன்படுத்தப்படுகிறது. மிகுதி, கடலில் விழுகிறது, வழியில் வெள்ளச் சேதம் விளைவிக் கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் நம் நாட்டின் நீர்வளம் பரவலாக இல்லாமல், பிரம்மபுத்ராவில் மட்டும் 60 சதவிகிதமும், மற்ற 40% சதவிகிதம் நாடு முழுவதுக்குமாக அமைந்துள்ளது. பிரம்மபுத்ரா பாயும் வடகிழக்கு மாநிலங்களில், தண்ணீர் விகிதம் நபரொன்றுக்கு ஆண்டுக்கு 18,500 கன மீட்டர். தமிழ் நாட்டில், வெறும் 380 கன மீட்டர். வறட்சி வருடங்களில் இதுவும் குறையும். தீபகற்பப் பகுதிகளில் நதிநீர், பருவ மழைக்காலமான 12 வாரங்களில் வழிந்தோடிவிடுகிறது. வருடத்தின் மற்ற நாட்களில் நதிகள் பெரும் பாலும் வறண்டு கிடக்கின்றன. (வட இந்திய நதிகள், பனி உருக்கு காரணமாக ஜீவநதிகளாக வருடம் முழுவதும் நீர் கொண்டிருக்கின்றன.)

ஈ. இந்தியாவில் இன்றுள்ள உணவு உற்பத்தியின்படி, சராசரியாக நபருக்கு நாளொன்றுக்கு 525 கிராம் உணவு கிடைக்கிறது. ஆனால், அண்டை நாடு சீனாவில், இந்த விகிதம் ஏறக்குறைய ஒரு கிலோ. நாம் இன்றுள்ள உணவு விநியோக விகிதத்தை எடுத்துக் கொண்டாலே, கூடும் ஜனத்தொகைக்காக 2050ல் குறைந்தது 500 மில்லியன் டன்கள் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும். இது சாத்தியமாக வேண்டுமென்றால், மொத்த விளைநிலங்களில், பாசன வசதி பெற்ற நிலத்தின் விகிதம் இன்றைய 40 சதவிகிதத்திலிருந்து, 75 சதவிகிதமாக உயரவேண்டும்.

உ. நாம் கிராமப்புறங்களில் பெரும்பகுதிக்கு இன்னும் குடிதண்ணீர் வசதிகளைத் தரவில்லை. நமது மாநகரங்கள் ஒவ்வொன்றும் (கொல்கத்தா நீங்கலாக) தண்ணீர்த் தட்டுப்பாட்டில் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. சுகாதரத்துக்குத் தேவையான தண்ணீரைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். கூடுதலாக, நமது தொழில் வளர்ச்சிக்கு தண்ணீர் ஒரு அடிப்படை கட்டமைப்பாகும்.

இந்த விவரங்களின் அடிப்படையில் பார்த்தால் நாம் முன்னுரிமை தரவேண்டிய திட்டங்கள் என்னென்ன என்று விளங்கிவிடும்: நமக்கு அமைந்துள்ள நீர்வளம் சராசரிக்கும் கீழ்தான். இதிலும் நாம் உபயோகிக்கும் வளம் 30 சதவிகிதம் தான். இதிலும் சில பகுதிகளில் வளம் மிகுந்தும் மற்ற பகுதிகளில் மிகவும் குறைவாகவும் இருக்கும் இயற்கை தந்துள்ள நிலைகுலைவுக்கு (MALDISTRIBUTION) நாம் மாற்றைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். உதாரணத்துக்கு, பிரம்மபுத்ராவின் நீர்வளத்தை நாம் உபயோகப்படுத்தாத வரை நாட் டில் நீர்வள சமநிலை கிடைக்காது. தீபகற்பப் பகுதியில், 12 வாரங் களில் கிடைக்கும் பருவ மழை நீர் வரத்தை நாம் வருட முழுமைக்கும் உபயோகப்படுத்தக் கூடிய திட்டங்களை மேற்கொண்டே ஆகவேண்டும். இதனால்தான், நதி நீர் இணைப்புத் திட்டம் முக்கியத்துவமும் முன்னுரிமையும் பெறுதல் அவசியம்.

"பச்சை"வாதிகள் (environmentalists), நதிகள் இணைப்பை எதிர்க்கும் வாதத்தில், மழை அறுவடை, பழைய நீர்நிலைகளைப் பழுது பார்த்தல் (ஏரிகள், குளங்கள்) மூலமே நீர்வளத்தை தேவையான அளவுக்குப் பெற்றுவிடலாம் என்று கூறுகிறார்கள். இது எவ்வளவு அபத்தமான வாதமென்பது புரியவேண்டுமென்றால், நாம் இந்தியாவின் கடந்த கால உணவுப் பாதுகாப்புச் சரித்திரத்தைப் பார்த்தால் போதும். சம்பிரதாயமான நீர்வளப் பராமரிப்புகள் செயல்பட்டுவந்த சமீப நூற்றாண்டுகளில், நாட்டில் ஏழுமுறை கடும் பஞ்சங்கள் வந்தன. 1769-70ம் ஆண்டு 30லட்சத்திலிருந்து ஒரு கோடிப்பேர்வரை மாண்டதாகத் தெரிகிறது. 1937-38ல் எட்டு லட்சம் பேர் மாண்டனர். 1866-67ல் 15 லட்சம் பேர் மாண்டனர். 1876-77ல் ஐம்பது லட்சம் பேர் மாண்டனர். 1896-97ல் மறுபடி ஐம்பது லட்சம் சாவுகள். 1899-1900ல் முப்பது லட்சம் சாவுகள். நம்மில் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு, இருபதாம் நூற்றாண்டில், 1943ல் வங்கத்தில் விளைந்த கடும் பஞ்சமும் பல்லாயிரக்கணக்காண மக்கள் மாண்டதும் நினைவிருக்கும். இத்தனைக்கும், 1800ல் இந்தியாவின் ஜனத்தொகை 12 கோடிதான். 1943ல் 30கோடி. இன்று 100கோடிக்கும் அதிகம்.

சுதந்திரத்துக்குப் பிறகு, நதிவள மேம்பாட்டுக்கு முன்னுரிமை தரப்பட்டதால்தான் பசுமைப் புரட்சி சாத்தியமாயிற்று. இன்று நாம் ஓரளவுக்கு உணவுப் பாதுகாப்பைப் பெறுகிறோமென்றால், ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் அரசு நதிநீர்வள மேம்பாட்டில் செய்த முதலீடுகளும் காட்டிய அக்கறையும்தான் காரணம். கடந்த இருபது ஆண்டுகளில் இந்த முதலீடுகளும் சிரத்தையும் தொய்வடைந்து விட்டதன் அறிகுறிகளை நாம் இப்போதே காணமுடிகிறது. உணவு உற்பத்தி அளவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இல்லை. இதன் காரணமாக நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்ப டுகிறது. பெருமளவில் பட்டினிச்சாவுகள் இன்னும் நிகழவில்லை என்றாலும், நீர்வளக் குறைவால் விவசாயிகள் தற்கொலை அதிகரித்து வருகிறது. ஆழ்துளைக் கிணறுகள் வற்றத் துவங்கிவிட்டன. ஆந்திராவில், ஆழ்துளைக்கிணறுகள் தோண்டுவதில் தோல்வியுற்றவர் களும் தற்கொலை செய்துகொண்டதைப் பார்க்கிறோம். குடிக்கத் தண்ணீர் இல்லாததால், 2001-02 ஆண்டில், தர்மபுரி மாவட்டம் ஒன்றில் மட்டும், 32000 குடும்பங்கள் வெளியேறினதாகச் செய்திகள்.

நடப்பு வருடம் வடகிழக்கு பருவ மழை தவறிவிட்டால், சென்னை மாநகரத்தில் வாழும் 70 லட்சம் பேர்களும் வெளியேறும் நிலை வரலாம். ஏனெனில், நகருக்குத் தண்ணீர் தரும் ஏரிகள் அறவே வரண்டுள்ளன. தெலுகு கங்காவிலோ, வீராணத்திலோ நகருக்கு வேண்டிய குறைந்த பட்சம் தண்ணீர்கூட கிடைக்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. மற்ற மாவட்டங்களிலும் பல இந்த அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதைப் பார்க்கிறோம். ஓரிரண்டு மழை பெய்து விட்டால், ஓரளவு தற்போதைக்கு தண்ணீர் கிடைத்து விட்டால், நாம் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் ஒரு சேர மறந்துவிடுகிறோம். இப்படி, கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில், கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையை, வளச்சியை பணயம் வைப்பது மதியீனம்.

வருடமுழுவதும் பாசன வசதியுள்ள வட மாநிலங்களின் விளைச்சலால், நாடு பட்டினி கிடக்காமல் இன்னும் சில காலத்துக்குக் காப்பாற்ற முடியலாம். ஆனால், மேற்சொன்னபடி, 2050ல் நாம் 500 மில்லியன் டன் உணவுப் பொருட்களுக்கு வழி செய்தாக வேண்டும். அதற்கு பாசன வசதியை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியேயில்லை. ஆழ்துளைக் கிணறுகள் மூலம் இப்போது நடந்து கொண்டிருக்கும் விவசாயம் எத்தகைய ஆபத்தான விளைவுகளைத் தரப்போகிறது என்பதை சில தினங்களுக்கு முன்பு ஒரு அமெரிக்க ஆய்வாளர் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆசியா முழுவதிலும் இப்படி நிலத்தடி நீரை உறிஞ்சிக் கொண்டே இருந்தால் (இந்தப் பந்தயத்தில் இந்தியா முதல் நிலை வகிப்பதை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்) புவியியல் தன் மையே மாறிப்போகும் அபாயம் இருப்பதாகக் கூறுகிறார். 1990களில், மற்றுமொரு அமெரிக்க (வானிலை) ஆய்வாளர், இன்னும் பதினைந்து ஆண்டுகளில் தீபகற்பப் பகுதி, குறிப்பாகத் தமிழகம், பாலைவனமாகி விடும் அபாயம் இருப்பதாகக் கூறியுள்ளார். இது நிகழ்ந்தால், கோடிக் கணக்கில் மக்கள் புலம் பெயர வேண்டிவரும். மனித வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவு, மக்கள் கோடிக்கணக்கில் தண்ணீரைத் தேடி, பசுமையைத் தேடி, ஆயிரக்கணக்கான மைல்கள் அலையவேண்டி வரும். கற்பனை செய்யவே பயமாயிருக்கிறது. ஆனால், இது வீணான,

அடிப்படையில்லாத, கற்பனை அல்ல என்பதை, தர்மபுரி நிகழ்ச்சிகள் அபாய மணியடித்துத் தெரிவிக்கின்றன.

ஆக, நதிகளை இணைத்து, நமக்கு உள்ள நீர்வளத்தை செம்மையாகப் பயன்படுத்திக்கொள்வதைத் தவிர நாட்டிற்கு வேறு வழியேயில்லை என்பது தெளிவாகிறது.

## திட்டத்தின் பயன்கள்

ஒன்பது கோடி ஏக்கர்களுக்கு பாசனம்
உணவு உற்பத்தி 40கோடி டன்களாக இரட்டிப்பு
வருடந்தோறும் ரூபாய் 180000 கோடி அதிகச் செல்வம்
நேரடியாக ஒரு கோடிப்பேருக்கும் (பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்)
இணைப்பாக 10 கோடிப்பேருக்கும் வேலைவாய்ப்பு
35000 மெகாவாட் கூடுதல் மின்சார உற்பத்தி
வெள்ள, வரட்சி நிவாரண செலவு மிச்சம்: வருடத்திற்கு ரூபாய் 45000 கோடி
கிராமப்புற பொருளாதாரம் செழிக்கும்: வறுமை விலகும்

1980கள் வரை, நதிகளை இணைப்பது பற்றி பல யோசனைகள், திட்டங்கள், காகித அளவில் தோன்றி, பேசப்பட்டு, பிறகு மறக்கப்பட்டு வந்தன. காட்டன் துரையிலிருந்து, சி.பி.ராமசாமி ஐயர், கே.எல்.ராவ், தஸ்தூர் வரை, பல திட்டங்கள் பேசப்பட்டு வந்தன. ஆனால், முதல் முறையாக நாட்டின் நீர்வளக் கொள்கை என்று ஒன்று உருப்பெற்று வெளயிடப்பட்டது 1987ம் வருடம்தான். மத்திய அரசின் நீர்வளத் துறை அமைச்சகம் வெளியிட்ட இந்த நிபுணர்களால் வரையப்பட்ட கொள்கைப் பதிவு, மத்திய அரசின் கொள்கைப் பதிவு முயற்சிகளில் மிக மேம்பட்டதாக விளங்குகிறது.

இந்த நீர்வளக்கொள்கையின் முக்கியப் பரிந்துரைகளில் ஒன்று, "தண்ணீர் பற்றாக்குறைப் பகுதிகளுக்கு, தண்ணீர் மிகுதிப் பகுதிகளிலிருந்து, (நதிகளை இணைப்பது மூலம்) மாற்ற வேண்டும்" என்பதாகும். இந்த பரிந்துரையை ஏற்ற மத்திய அரசு, உடனடியாக இந்த சாத்தியக் கூறுகளை ஆராய தேசீய நீர்வள மேம்பாட்டு முனையத்தை (National Water Development Agency) நியமித்தது. இந்த முனையம் இந்திய நதிகளின் நீர்வரத்து, உபயோகம், மிகுதி பற்றிய விவரங்களை மாநில அரசுகளின் உதவியுடன் பத்தாண்டுகளுக்கு மேல் சேகரித்து இந்த விவரங்களின் அடிப்படையில் ஒரு நதிகள் இணைப்புத் திட்டத்தை உருவாக்கியது. இந்தத் திட்டத்தின் தீபகற்பப் பகுதி முன்னுரிமை பெற்று, முன்னிலை சாத்தியக்கூறு (pre-feasibility) ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த காலகட்டத்தில், மக்கள் சக்தி இயக்கம், நதிகளை இணைப்பதை வலியுறுத்துவதை தனது கொள்கைகளுள் முதலாவதாக எடுத்துக் கொண்டது. 1988லிருந்து 1991வரை, தென்னக நதிகளை

இணைப்பதற்கான பொறியியல் அடிப்படையிலான யோசனைகளை மத்திய அரசுக்கு அனுப்பியது. 1991ல் டாக்டர் உதயமூர்த்தி தலைமையில் குமரியிலிருந்து சென்னைக்கு, 1038 கி.மீ. - 38 நாட்கள், பாத யாத்திரை மேற்கொண்டது. இது தமிழகமெங்கிலும், நதிகளை இணைப்பதன் அவசியம் பற்றிய உணர்வை எல்லா மக்களிடமும் வளர்க்க ஆரம்பித்தது. 1992ல் இயக்கத்தின் தலைமையில் ஒரு வேளாண்மைக் குழு டில்லி சென்று அன்றைய குடியரசுத் தலைவர் திரு வெங்கடராமன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்து இந்த திட்டத்தை வலியுறுத்தியது. ம.ச.இ. மறுபடி ஜூலை1995ல் சென்னையில் ஒரு மாநாட்டை நடத்தியது. இதில் கலந்து கொண்ட திரு மூப்பனார் அவர்கள், "கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவதாயிருந்தாலும், நான் இந்த திட்டத்துக்கு என் முழு ஒத்துழைப்பையும் தருவேன்" என்று மேடையில் முழங்கினார். இந்த மாநாட்டின் சிறப்பம்சம், இதுவரை தமிழகத்தில் மட்டும் கேட்டுவந்த நதிகள் இணைப்பு முழக்கம், அந்த மேடையில் தென்னக முழுமைக்குமான முழக்கமானது. ஆந்திராவைச் சேர்ந்த திரு செங்கல் ரெட்டி, ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த திரு பருவா (பொதுப்பணி தலைமைப் பொறியாளர், ஓய்வு) இந்தத் திட்டத்தை வலியுறுத்திப் பேசினர்.

1996ல் மக்கள் சக்தி இயக்கம், மற்றொரு வேளாண் குழுவை அழைத்துக்கொண்டு டில்லி சென்றது. இதில் திரு செங்கல் ரெட்டி கலந்து கொண்டார். தான் பொதுமேடையில் சென்னையில் கொடுத்த உறுதியை, திரு மூப்பனார் 150% இந்த குழுவிற்கு உதவுவதன் மூலம் வெளிப்படுத்தினார். ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், எதிர்கட்சிகளான பா.ஜ.க. மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களையும் துணைக் குடியரசுத் தலைவர் திரு நாராயணன் அவர்களையும் குழு சந்தித்தது.

உச்சகட்டமாக அன்றைய நீர்வளத்துறை அமைச்சர் திரு வி.சி.சுக்லா அவர்களிடம் குழு நடத்திய பேச்சு வார்த்தைகள் அமைந்தன. திரு சுக்லா குழுவினிடம் கூறினார்: "திட்டம் சாத்தியமானது என்று மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், மாநிலங்களில் இது அரசியல் படுத்தப்படும். ஆகவே, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் மக்களிடையே சென்று, இந்தத் திட்டத்துக்கு ஒப்புதலும் அனுகூலமான சூழலையும் பெறும் பொறுப்பை உங்களுக்குத் தருகிறேன். தவிர, திட்டத்தை நிறைவேற்றும் வழிவகைகளையும் நீங்கள் பரிந்துரை செய்யுங்கள்" என்றார். இந்த உறுதி ஒருமாத காலத்துக்குள் செயலாக்கப் பட்டது. மக்கள் சக்தி இயக்கத்தின் பரிந்துரையின்பேரில், ஒரு தன்னார்வக்குழு, தமிழகம் (6 பேர்), ஆந்திரா (இருவர்), ஒரிஸ்ஸா (ஒருவர்) அமைக்கப்பட்டது. ஒரு சில மாதங்களில் இந்தக்குழு ஹைதராபாத்தில் தனது முதல் கலந்துரையாடலை மேற்கொண்டது. பல நீர்வளத்துறை பொறியாளர்கள், விவசாயக்குழுக்களின் தலைவர்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில், தென்னக நதிகள் இணைப்புத் திட்டம் வரவேற்கப்பட்டது.

மத்தியில் அரசுகள் மாறின. திட்டமும் அத்துடன் தன்னார்வக் குழுவும் கிடப்பில் போடப்பட்டன. முதலில் கூறியபடி, நாடு தனது "ஜனநாயக"ச் சிலுவையாக இப்போது இந்தப் பிரச்சினையைச் சுமக்கிறது. 1997ல் திட்டம் துவக்கப்பட்டிருப்பின், இன்று மகாநதித்

தண்ணீர் தமிழகத்தின் வடக்கு வாயிலில் தளும்பிக்கொண்டிருக்கும். இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகளில் காவிரியில் மேட்டூரை எதிர்பார்க் காமல் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும். ம.ச.இ. சோர்ந்து விடாமல் இந்தத்திட்டத்தை அரசிடமும் மக்களிடமும் வலியுறுத்திக் கொண்டே இருந்தது.

மறுபடி, திட்டத்துக்கு நல்ல காலம் பிறந்தது. 2002ல், உச்ச நீதிமன்றம், குடியரசுத்தலைவர், பிரதமர் என்று மும்மூர்த்திகளும் திட்டத்துக்காக வாய்திறந்தனர். எதிர்பார்த்தபடி, மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் என்று எல்லாரும் பேசத்துவங்கினர். மறுபடி தேர்தல். திட்டத்துக்கு மற்றுமொரு பின்னடைவு. பழையபடி, ம.ச.இ. தன் னுடைய பொறுப்பை எடுத்துக்கொண்டுள்ளது. வரும் ஞாயிறு (செப்டம்பர் 19) சென்னை அடையாறில், தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு ஜி.கே.வாசன் தலைமையில் ஒரு அகில இந்திய மாநாட்டைக் கூட்டியுள்ளது. இதில் தண்ணீர்ப் பிரச்சினையில் அக்கறையுள்ள யாவரும் கலந்து கொள்ளவேண்டும்.

முடிவாக, நாட்டின் முன்னுரிமை பெறவேண்டிய விஷயங்கள் எவை என்று பார்த்தால் -

** உணவுப் பாதுகாப்பு. 2050-ல் 500மில்லியன் டன் உணவு தானியங்கள் தேவை. உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் ஏழை மக்கள்தான். நாடு பணக்கார நாடாகிக் கொண்டிருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களின் விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. இத்துடன், உணவுப் பொருட்களை வாங்கும் சக்தியும் அதிகரித்துக்கொண்டே வரும். இன்றைக்கு சராசரி நபர் நாளொன்றுக்கு 500 கிராம் உணவுப் பொருட்களை வாங்கினால், 2050ல் இது ஒரு கிலோவிற்கு மேல் அதிகமாகும்.

** உணவு உறபத்திப் பெருக்கத்திற்கு பாசன வசதிகளை அதிகம் ஆக்குவதுதான் வழி. நாட்டில், சாகுபடி செய்யப்படாத நிலம் மிகக் குறைவு. இருக்கும் நிலத்தில் அதிகம் விளைவிக்கவேண்டுமென்றால், பாசன வசதி வேண்டும். இன்றைக்கு 98 மில்லியன் ஹெக்டேர் நிலத்துக்கு பாசன வசதி உள்ளது. இது 160மில்லியன் ஹெக்டேராக உயர்ந்தால்தான் 500 மில்லியன் டன் உணவு தானியம் கிடைக்கும்.

** நிலத்தடிநீர் பாதுகாக்கப்படவேண்டும். இல்லையேல் விபரீதங்கள் விளையும். பசுமைப் போர்வை (GREEN COVER) அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் மழைவரத்து சரியாக இருக்கும். மழைநீர் விழும்போதே ஓடி கடலில் விழுந்துவிடும்போது, நிலத்தடி கசிவும் நிலத்தடி நீர் பராமரிப்பும் நிகழ்வதில்லை. மழைநீர் சேகரிப்பு, குளம், குட்டை, ஏரிகள் பராமரிப்பு இவை உதவும். ஆனால், இவற்றின் மூலம் நாம் பெறக்கூடிய கூடுதல் நீர்வளம் சொற்பம்தான். நதிகளை இணைத் தால் நிலத்தடிநீரை உறிஞ்சுவது குறையும். கசிவின்மூலம், நிலத்தடி நீர்வளம் பர்ரமரிக்கப்படும்.

**குடிநீர், பொதுச்சுகாதாரத்துக்கான நீர்த்தேவைகள், தொழில்களுக்கான நீர்த் தேவைகள் பெருகிக்கொண்டே வருகின்றன.

இன்றைய குடிநீர், சுகாதர அவலங்கள் நீடிக்கமுடியாது.

**இந்திய நீர்வளத்தில் இயற்கை ஏற்படுத்தியுள்ள சமனக் குறைபாடுகள், விநியோகக்குறைபாடுகள் (IMBALANCES, MALDISTRIBUTION), இவற்றை, நதிநீர் இணைப்பின் மூலமாகத்தான் சரிசெய்யமுடியும்.

**தீபகற்ப இந்தியா கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு என்ற ஒரு எரிமலையின் சிகரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. இது எப்போது வெடிக்கும், அனல்குழம்பை வாரியிரைக்கும் என்று தெரியாது. ஆனால், இந்த விபத்து, தூரத்தில் இல்லை. இந்த விபத்தைத் தடுக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டியது அரசின் கடமை. அரசு கடமையுணர்வோடு செயல்படாத போது, மக்கள்தான் எழுந்து நின்று அரசுக்குக் கடமையை உணர்த்த வேண்டும். இன்றைய தினம் அப்படிப்பட்ட நினைவூட்டலாக இருக்கட்டும். ஒரு தேசியக் கட்சியின் தலைவர் மக்கள் சக்தி இயக்கத்தின் தலைமையிடம் சொன்னார்: "உங்கள் முயற்சிகளின் பின்னே தேர்தல் வாக்குகள் இருக்கின்றன என்று காட்டிவிடுங்கள். எந்த அரசியல் கட்சியும் உங்களை உதாசீனம் செய்துவிடமுடியாது." என்று.

தென்னக நதிகள் இணைப்புத்திட்டம் (மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை, மற்றும் அச்சன்கோயில்/பம்பையாறு, ஹேமவதி/ஹாரங்கி) தயாராக இருக்கிறது. இன்னும் ஒராண்டுக்குள் இதைச் செயல்படுத்த ஆரம்பித்துவிடலாம். 1995ம் வருட மதிப்பீட்டின் படி இந்தத் திட்டத்துக்கு 36000 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக் கிடப்பட்டது. இன்று, இது 50000 கோடியாக இருக்கலாம். பத்தாண்டு களில் இதை நிறைவேற்றுவதானால், ஆண்டொன்றுக்கு ரூபாய் 5000 கோடி முதலீடு வேண்டும். வறட்சி, வெள்ள நிவாரணங்களுக்கு இதைவிட இருமடங்கு ஒவ்வொரு ஆண்டும் நமது வரிப்பணம் செலவிடப்படுகிறது. இது புத்திசாலித்தனமாகாது. உலக வங்கி, தண்ணீர்த்திட்டங்களுக்குத் தங்கு தடையின்றி உதவுகிறது. பங்குச் சந்தையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட TATA CONSULTANCY SERVICES என்ற நிறுவனத்தின் பங்குகளுக்கு, ஒருவார காலத்தில் 6000 கோடி ரூபாய் வசூலானது. பணமில்லை என்றால் அது சாக்குப் போக்காகத்தான் இருக்கும்.

இந்தத் தென்னகத் திட்டதிலேயே, ஓரிரு ஆண்டுகளுக்குள் நிறைவேற் றப்படக்கூடிய மூன்று குறும் பகுதிகள், தமிழகத் தண்ணீர்த் தட்டுப் பாட்டை அறவே, இந்த குறுகிய கால கட்டத்துக்குள், குறைந்த முதலீட்டில் அகற்றிவிடும் சாத்தியம் இருக்கிறது. இவை முறையே, அச்சன்கோவில்/பம்பையாறு(கேரளா), ஹேமவதி/ஹாரங்கி (கர்நாடகம்). பெட்டி/வர்தா(மஹாராஷ்டிரம்) ஆகும். சிறிய திட்டங்கள். கணிசமான நீர்வரத்து வாய்ப்புகள். ஆனால், இந்த மூன்றிலும் தமிழகத்துக்கு கீழைய் நதிப்பாசன உரிமைகள் (lower riparian rights) கிடையாது. அரசியல் படுத்தாமல், வணிக அணுகு முறையில் இவற்றை நிறைவேற்றிக் கொள்வது சாத்தியமே. இந்த வளங்களைப் பெற்றுள்ள மாநிலங்கள் இவற்றை உபயோகப்படுத்த வாய்ப்பில்லை. ஆனால், உனக்கு உபயோகமில்லையே எனக்கு ஏன் தரக்கூடாது என்ற வாதம் எடுபடாது. தர வேண்டியதைத் தந்து

பெறவேண்டியதைப் பெற முடியும். தண்ணீரின் மதிப்பு இப்போது எல்லாருக்கும் புரிகிறது. உரிய மதிப்பைத் தந்துதான் தண்ணீரைப் பெற முடியும் என்ற நிலை விரைவில் வந்துகொண்டிருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு, சமயோசிதமாகப் பேச்சுவார்த்தை நடத்தி தமிழகத்தின் தீராத தண்ணீர்த் தாகத்தை வருங்கால முழுமைக்கும் தீர்க்கும் கடமை அரசுக்கு இருக்கிறது.

எஸ்.பார்த்த சாரதி,
மக்கள் சக்தி இயக்கம்